# மேல்நிலைத் தேர்வு, மார்ச்சு 2011

## பகுதி -1

## தமிழ் முதற்றாள் - விடைக் குறிப்புகள்

விடைத்தாள்கள் மதிப்பிடும்போது கீழ்க்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும்.

1. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து தொடர்ப்பிழை, சொற்பிழை, எழுத்துப் பிழை, ஒற்றுப்பிழை இல்லாதிருப்பின், முழுமதிப்பெண் வழங்குதல் வேண்டும்.
2. எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து, அவ்வாறு குறைக்கும் மதிப்பெண் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் மிகாமல் இருத்தல் வேண்டும்.
3. தவறான விடைகளை (X) குறியிட்டும், தொடர்ப் பிழைகளை அடிக்கோடிட்டும், ஒற்றுப் பிழைகளை (∧) குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.
4. மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் தனித்தனியே (√) குறியிடுதல் வேண்டும்.
5. மிகையாக விடை இருப்பின் ' மிகை ' என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
6. ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் ' மீண்டும் ' என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.

I. எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடை 4 X 2 = 8

1. அகநானூற்றில் மூன்று பகுதிகள் உள்ளன.

2. நாம் ஓர் உதவியும் செய்யாதிருக்கும் நிலையில் ஒருவர் நமக்குச் செய்த உதவிக்கு இம்மண்ணுலகமும் விண்ணுலகமும் ஒப்பாகா.

3. வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள்

| | |
|---|---|
| திருக்காவலூர்க் கலம்பகம் | செந்தமிழ் இலக்கணம் |
| கித்தேரியம்மாள் அம்மானை | கொடுந்தமிழ் இலக்கணம் |
| வேதியர் ஒழுக்கம் | தொன்னூல் விளக்கம் |
| பரமார்த்த குரு கதை | சதுரகராதி |

(இவற்றுள் நான்கு நூல்கள் இருப்பின் முழுமதிப்பெண் தரலாம்)

4. அந்தாதி = அந்தம் + ஆதி

ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அதற்கு அடுத்து வரும் பாடலின் முதலாய் வரும்படி அமைத்துப் பாடுவது அந்தாதி எனப்படும்.



www.kalvisolai.com
இரு முழுமையான தகவல் களஞ்சியம்

5. நாடெங்கும் புத்தக சாலை வேண்டும்

i) மக்களிடையே அன்பு நெறி வளரவும்,

ii) விரிந்த மனப்போக்கு ஏற்படவும்,

iii) தன்னல நோக்கு தகரவும்,

iv) உலக மக்கள் எல்லோரும் ஓரினத்தவர் என உணரவும்,

v) உயர்ந்த எண்ணங்கள் உருவாகவும்,

vi) மக்கள் புனிதமுற்று வாழவும்.

எவையேனும் நான்கு கருத்துக்களுக்கு முழு மதிப்பெண் வழங்கலாம்.

6. தேவார மூவர் :

1.அப்பர் (திருநாவுக்கரசர்)

2.சம்பந்தர் (திருஞானசம்பந்தர்)

3.சுந்தரர்.

II எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை 3 X 4 =12

(எவையேனும் நான்கு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்குக)

7. கம்பர் 'நன்றே நம்பி குடிவாழ்க்கை' என்பதன் நயம்

i) எல்லா மதத்தவரும் கடவுள் ஒருவரே என்பதால் ஒன்றேயென்னின் ஒன்றேயாம். உலகின் இயக்கத்திற்கு ஐம்பூதங்களாக நின்று செயல்படும் இறைவன் "பலராகவுள்ளார்" என்போருக்கு "பலவென்று உரைக்கின் பலவேயாம்".

ii) குறிப்பிட்ட பொருளைப்போல் இல்லாமல், இறைவன் உருவமற்றவன் என்பார்க்கு "அன்றேயென்னின் அன்றேயாம்".

iii) கதிரவன் போல் பேரொளியும், நிலவுபோல் தண்மையும், காற்றினைப் போல் பரவியவன் இறைவன் என்றால், "ஆமேயென்னின் ஆமேயாம்".

iv) 'இறைவன் உளன்' எனும் கொள்கை உடையவருக்கு 'உளதென்றுரைக்கின் உளதேயாம்'.

மாறுபட்ட தன்மைகளை உடைய இறைவனை, "நன்றே நம்பி குடிவாழ்க்கை" என வியந்து கூறுகிறார் கம்பர்.

8. நற்றாய் காக்கைக்குப் பராய்க்கடன் உரைத்தல் :-

1. குற்றம் சிறிதும் இல்லாத சிறகினை உடைய சிறிய கருநிறமுள்ள காக்கையே! கேள்.
2. நீயும், உன்னுடைய சுற்றமும் உண்ணும்படி பச்சை ஊன் இட்டு சமைத்த உணவை, பொன் பாத்திரத்திலே உனக்குப் பலியாய்க் கொடுப்பேன்.
3. இந்நிகழ்வுக்குக் கைமாறாக நீ செய்யவேண்டியது.
4. என் மகள், அவள் தேர்ந்து கொண்ட தலைவனொடு, என் இல்லம் வரும்படி கரைவாயாக.

9. பொறையுடைமையின் சிறப்பனை - வள்ளுவர்.

1. நிலம் போலப் பொறுமை.
2. வரம்பு கடந்த குற்றத்தைப் பொறுத்தல் சிறப்பு. மறத்தல் அதனினும் சிறந்தது ஆகும்.
3. விருந்தினரை உபசரியாமையே வறுமையுள் வறுமை. அறிவிலார் குற்றங்களைப் பொறுத்தலே வலிமையுள் வலிமை.
4. பொறையுடைமையைப் போற்றின் நிறையுடைமை என்ற சான்றாண்மைப் பண்பு நீங்காது.

www.kalvisolai.com
(ஒரு முழுமையான தகவல் களஞ்சியம்)

10. கோலியாத்து தாவீதனைக் கண்டு வெகுண்டு உரைத்தவை :-

1. தாவீதைக் கண்ட கோலியாத்து கரிய மேகத்திடையே எழும்பும் கோடைகாலப் பேரிடி போல் உரைசெய்தான்.
2. சிறியவனாகிய நீயா என்னை எதிர்ப்பது.
3. மதயானையை எதிர்த்து நாய் போர் புரிவதுண்டோ?
4. சினங்கொண்டு பெருமூச்சு விட்டாலே புழுதிபோல பறந்து போவாய்.
5. உலகத்திற்கு அப்பால் சென்று விழுவாய்.

11. பேழையை மீட்டுத் தரும்படி அன்னம், வேலனை வேண்டியது.

1. பாண்டியன் பரிசைத் தேடித் தருவோர்க்கு, என்னையே இழந்து போவேன், என்று முரசறைந்ததைக் கேளாது நாள்களை வீணாகக் கழித்து விட்டீர்களே.
2. பாண்டியனார் அளித்த பரிசுகள் அடங்கிய பேழைக்குள், பகைவரை அழிக்கும் குறிப்பு உள்ளது.
3. கொண்டு வந்தால் உமக்குப் பெரும்புகழ்.
4. நாட்டிற்கு பெரிய நன்கொடை அளித்த பெருமை, உமக்கு என்றாள்.

III எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை 3 X 4 =12

12. தலைவி மேகத்திடம் மொழிந்த தூது மொழிகள்

1. திருமாலைப் போன்ற கரிய நிறமுடையதும், சந்தன மரங்கள் நிறைந்த பொதிகை மலைச் சாரலில் தங்கியுள்ள மேகங்களே!
2. மாலை நேர பிறைச்சந்திரனும், இரை தேடுகின்ற குயிலின் குஞ்சும் என் உயிரை வாயிலிட்டுப் புசிக்கின்றன.
3. இச்செய்தியை, மேகங்களே! கயிலாய மலையிலும், மேருமலையிலும், பொதிகை மலையிலும் எழுந்தருளியுள்ளவனும்
4. தடாதகைப் பிராட்டியின் கணவராகிய மதுரைச் சொக்கநாதப் பெருமானிடம் சென்று புகல்வீர்களாக.

13. தென்கரை நாட்டின் வளம் குறித்து - முக்கூடற்பள்ளு

1) கடுமையாக இங்கு காய்வது சூரியக் கிரணங்களே நடுவுநிலையாளர் காய்வது (சினப்பது) இல்லை.
2) கலங்கி நிலைகுலைவன தயிர்க்கண்டங்களே நோய்க்கண்டங்களால் நிலைகுலைபவர் இலர்.
3) மாய்ந்து ஒழிவன நாழிகையும் வாரமுமே. இளமையில் இறப்பவர் எவரும் இலர்.
4) கலங்கிச் சுழல்வது நீர்ச்சுழிகளையுடைய வெள்ளமே, பிறநாட்டுப் படைபுகுந்து கலக்குவது இல்லை.
5) நன்கு முற்றிய செந்நெல் பயிரே சாயும் மக்கள் குலைநோயுற்றுச் சாய்தல் இல்லை.
6) தவசிகளே தனித்திருப்பர், இல்லறத்தார் அன்பற்றுத் தனித்து வாழ்வது இல்லை.
7. சந்தனக்கட்டை தேயும். அன்னம் போன்ற பெண், தூதுரைத்துத் தேய்வதில்லை.



www.kalvisolai.com
(ஒரு முழுமையான தகவல் களஞ்சியம்)

14. சுரதா 'ஓர் உவமைக்கவிஞர்' - சிக்கனம் (கவிதை)

1. 'உவமை என்பது உயர்ந்ததன் மேற்றே' - என்பதற்கு இணங்க, தந்தை பெரியார் வாழ்வை சுட்டிக்காட்டல்.
2. தந்தை பெரியார் அவரது எடைக்கு ஈடாய் பொருள் கிட்டிய போதும், செலவழிக்கவில்லை.
3. அன்றாடச் செலவை சிக்கனப்படுத்தி, சிக்கனமாய் வாழ்ந்து, சீராகச் செட்டாக பெரியார் போல் வாழ்ந்து காட்டவேண்டும்.
4. சிக்கனமாய் வாழ்பவர்களுக்கு வரும் துன்பம் பாறாங்கல் மீது பட்ட மழைநீர் போல் சிதறிப்போகும்.
5. (பகட்டு வாழ்க்கை நீராவி போன்றது. சிக்கன வாழ்க்கை நீருற்று போன்றது. என்ற உவமையையும் காட்டலாம்).

15. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும், வேண்டாததும்.

வேண்டுவது :

திருமால் எழுந்தருளியுள்ள திருவேங்கட மலையில் மீனாய்ப் பிறப்பது.

வேண்டாதது :

விண்ணுலகம், மண்ணுலகம் ஆகியவற்றை ஆளும் பதவி.

16. சிலுவையில் பரித்தியாகம் செய்த பெருமானைக் கிருஷ்ணப்பிள்ளை அஞ்சலி செய்யும் விதம் :

1. இயேசு, கன்னித்தன்மை அழியாத மரியாளின் மகனாய் இந்த உலகத்தில் தோன்றினார்.
2. நிலைபெற்ற கோடிக்கணக்கான உயிர்கள் நிலைத்த வாழ்வு பெற பரிவு கொண்டார்.
3. உலகமக்கள் வீடுபேற்றை அடையும் பொருட்டுத் தம் உயிரைப் பலியாய்ச் சிலுவையில் தியாகம் செய்தார்.
4. வழிபடு கடவுளாகிய இவரை, இருகைகளையும் தலைமேல் தூக்கிக் கூப்பித் தொழுவோம்.

IV. ஏதேனும் ஒன்றனுக்கு இருபது வரிகளில் விடை எழுதுக. 1 X 8 =8

17. 'அறிவுடைமை' - அதிகாரக் கருத்துகளை தொகுத்து எழுதுதல்.
(எவையேனும் எட்டு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்குக.)

1. அறிவு என்பது, ஆபத்து நேராமல் காக்கும். மனத்தின் உள்அமைந்த காவலும் அறிவே.
2. மனதைத் தீயவழியிலிருந்து விலக்கி, மனதைக் கட்டுப்படுத்தி, நல்வழியில் ஆள்வதே அறிவு.
3. மெய்ப்பொருள் காண்பது அறிவு.
4. நுண்பொருள் காண்பது அறிவு.
5. உயர்ந்தாருடன் கொண்ட நட்பில், வளர்தல் தேய்தல் இல்லாமல், ஒரே நிலையில் ஒழுகுதலே அறிவு.
6. உலக வாழ்க்கையோடு, பொருந்தி வாழ்தலே அறிவு.
7. அறிவுடையார் ஆவது அறிவார். அறிவிலார் அறியார்.
8. அஞ்ச வேண்டிய பழி பாவங்களுக்கு அஞ்சாமல் வாழ்வது பேதைமை. அஞ்சி வாழ்தல் அறிவுடையார் செயல்.

www.kalvisolai.com
(ஒரு முழுமையான தகவல் களஞ்சியம்)